IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No.439 of 2019

Deposition of witness for

PW 10(LW04)

Name : Kumar

Father's Name : Thulukkanam

Age : Years

Address : No.19/9, Ammani Amman Thottam, 4th Street, Tondiarpet, Chennai-81.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 8th day of January 2026 .

---

08.01.2026

PW10 முதல் விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜரில் இருந்தார்

நான் நம்பர் 19/9 அம்மணி அம்மன் தோட்டம், 4 வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை என்ற விலாசத்தில் குடியிருந்து வருகின்றேன். பெயின்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 மற்றும் 2 ஐ யார் என்று எனக்கு தெரியாது. 2019 ஆம் வருடத்தில் எதிரி லட்சுமண் மற்றும் பெயர் மறந்து போன ஒரு நபருக்குமிடையே எங்கள் வீட்டுக்கு அருகில் சண்டை நடந்ததாக வேலை முடித்துவிட்டு இரவு வந்த பொழுது என்னுடைய மனைவி சொல்லி தான் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும்

அ.த.சா.ஆ.3. மேற்படி கையொப்பத்தை போலீசார் எங்க வீட்டாண்ட வந்து என்னிடம் வாங்கினார்கள். நான் எதற்காக இந்த கையெழுத்தை கேட்கின்றீர்கள் என்று கேட்டதற்கு சண்டை போடுவதற்கு சாட்சியாக இருப்பதற்காக கையெழுத்து வாங்குவதாக சொன்னார்கள். நான் கையெழுத்து போடும்போது மேற்படி பேப்பரில் எழுதப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை இல்லை

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

08.01.2026

Sd/-K.Geetharani, M.A., M.L.,
III Addl. Judge.
II Addl. Sessions Court (FAC)
City Civil Court, Chennai.